DEPOSITION OF WITNESS

IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,
TENKASI.

**MCOP.No.** 9/2022

| | | | |
|---|---|---|---|
| Name | : | திரு.மோசஸ் | **Pw1** |
| Father's Name | : | | |
| Village | : | | |
| Taluk | : | | |
| Caste | : | | |
| Calling | : | | |
| Religion | : | | |
| Age | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 4th day of December 2024.

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். நான் ஏற்கெனவே எனது நிரூபண வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். ம.சா.ஆ. 1 முதல் 13 வரையிலான ஆவணங்களை ஏற்கெனவே குறியீடு செய்துள்ளேன். இன்று எனது தரப்பில் மேலும் சில ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். அவை 1) TN-76-P-3312 வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் நகல் ம.சா.ஆ. 14 ஆகும். 2) TN-72-BE-1721 வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் நகல் ம.சா.ஆ. 15 ஆகும். 3) TN-76-AH-1786 வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் நகல் ம.சா.ஆ. 16 ஆகும். 4) மாதிரி வரைபடத்தின் நகல் ம.சா.ஆ. 17 ஆகும். 5) குற்ற இறுதிஅறிக்கையின் நகல் ம.சா.ஆ. 18 ஆகும். 6) விபத்தில் இறந்துபோன யோவான் நடத்திவந்த Yehovahijireh Enterprises ன் வரவு செலவு பதிவேட்டின் அசல் ம.சா.ஆ. 19

ஆகும். 7) பார்வை மகசரின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ. 20 ஆகும். மனுப்படி தீர்ப்பாக வேண்டும்.

**3 ம் எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

விபத்து சம்பந்தமான குற்ற இறுதி அறிக்கையில் விபத்தில் 3 வாகனங்கள் சம்பந்தப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த குற்ற வழக்கு குற்றவியல் நீதிமன்றத்தில் தற்போது என்ன நிலையில் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். இந்த விபத்திற்கு என்னுடைய மகன் மோட்டார் சைக்கிளை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி சென்று விபத்தை ஏற்படுத்திவிட்டார் என்றால் சரியல்ல. விபத்திற்கு முதல் காரணம் அவர்தான் என்றால் சரியல்ல. விபத்து, ரோட்டின் மையப்பகுதியில் நடந்ததாக மாதிரி வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்தில் இறந்துபோன யோவான் நடத்திவந்த Yehovahijireh Enterprises ன் வரவு செலவு பதிவேட்டின் ரசீதுகள் வழக்கிற்காக பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. அந்த நிறுவனம் தொடர்பான வங்கி கணக்குகள், மூலப்பொருட்கள் வாங்கியதற்கான ரசீதுகள், நிறுவனத்திற்கான பதிவேடுகள், நிறுவனம் நடைபெறும் இடத்தின் விவரங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

மேற்படி நிறுவனம் தமிழக அரசின் சிறு, குறு நிறுவனங்கள் கூட்டமைப்பில் பதிவுசெய்யப்பட்டுள்ளதா என்றால் பதிவுசெய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ.12 ஆவணம் அதிகமான நஷ்ட ஈடு பெற வேண்டும் என்பதற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்பதால் மேற்படி ஆவணம் நிராகரிக்கப்படவேண்டும் என்றால் சரியல்ல. என்னுடைய மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**( cross adopted by R1, R2 )**

**6 ம் எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

முதல் தகவல் அறிக்கையிலும், குற்ற இறுதி அறிக்கையிலும் அசோக் லேலண்ட் தோஸ்த் வாகனத்தை ஓட்டிய டேனியல் என்பவர் மீது தான் வழக்கு பதியப்பட்டுள்ளது என்றால் சரிதான். அசோக் லேலண்ட் தோஸ்த் வாகனத்தை ஓட்டிய டேனியல் என்பவரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். மேற்படி வாகனத்தின் 1 முதல் 3 எதிர்மனுதாரர்களின் காப்பீடு கழகத்திடம் தான் எங்களுக்குரிய இழப்பீட்டை கோருகிறோம் என்றால் சரிதான். மேற்படி விபத்திற்கு எனது மகன் எந்த வகையிலும் காரணம் கிடையாது என்றால் சரிதான்.

**( cross adopted by R7 )**

**மறுவிசாரணை இல்லை**

S MANOJKUMAR

Digitally signed by S MANOJKUMAR
Location: Additional District and Sessions Judge, Tenkasi